நண்பர்களே வணக்கங்கள்…

www.Padasalai.Net

வருமான வரி – e-filing / 24Q சார்ந்த பதிவு இது.

முதுகலை ஆசிரியர்கள், தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்களின் வருமான வரி – e-filing /24Q சார்ந்த சந்தேகங்களுக்கு எனக்குத் தெரிந்த தகவல்களை பதிலாகத் தந்துள்ளேன்.

1) நான் ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி மாதத்தில் பச்சை நிறப் படிவத்தில் பூர்த்தி செய்து எனது தலைமையாசிரியர் (பணம் பெற்று வழங்கும் அலுவலர்-DDO) அவர்களிடம் சமர்ப்பித்து விடுகிறேன் அவ்வளவு தானே?

   இல்லை- பிப்ரவரி மாதத்தில் Income Tax Calculation Statement படிவம் பூர்த்தி செய்து வழங்கிய பிறகு ஜுன்-ஜுலையில் ஒவ்வொரு தனிநபரும் e-filing செய்ய வேண்டும்.

2) எனக்கு வருமான வரியே வரவில்லை (அதாவது அந்த நிதியாண்டில் நான் வருமான வரி கட்டவேண்டிய தேவை எழவில்லை) அப்படி இருந்தும் நான் e-filing செய்ய வேண்டுமா?

   தங்களின் ஆண்டு வருமானம் 2,50,000 க்கு மேல் இருந்தால் (வருமான வரி கட்டினாலும் கட்டாவிட்டாலும்) நிச்சயமாக e-filing செய்ய வேண்டும்.

3) சரி அது என்ன e-filing ?

   5-6 ஆண்டுகளுக்கு முன்பு வரை மாவட்ட வருமான வரி அலுவலகத்தில் படிவம் பெற்று பூர்த்தி செய்து நேரில் சென்று சமர்ப்பித்து இருந்தோம். அதற்கு Income Tax Returns (ITR) என்று பெயர். அதே தான், Income Tax Returns (ITR) online இல் electronic முறையில் சமர்பித்தல் e-filing எனப்படுகிறது.

4) எல்லோருக்கும் ஒரே விதமான Income Tax Returns (ITR) தானா?

   இல்லை – ITR 1, ITR2, ITR3, ITR 4… என உள்ளது. ஆனால் நாம் அனைவரும் பொதுவாக தாக்கல் செய்வது ITR 1தான்.

5) Individual e-filing , Auditor மூலம் தான் சமர்ப்பிக்க வேண்டுமா?

   தேவை இல்லை- நீங்களாகவே எளிய முறையில் கணினியில் அல்லது smart phone இல் e-filing செய்யலாம் கட்டணம் எதுவும் கிடையாது.

6) 2020-2021 நிதியாண்டிற்கான e-filing இப்போது செய்யலாமா?

   செய்ய இயலாது – ஏனெனில் மத்திய வருமான வரித்துறை தங்களின் இணையதளத்தில் புதிப்பித்தல் பணியினை ஜுன் 1 முதல் ஜுன் 6 வரை மேற்கொள்ள உள்ளார்கள் , எனவே இணையதளம் ஒருவாரத்திற்கு இயங்காது அதன் பிறகு புதிய தளத்தை நாம் பயன்படுத்தலாம்.

7) 2020-2021 நிதியாண்டிற்கான தனிநபர் e-filing செய்ய கடைசி தேதி எது?

   31.07.2021 ஆக இருந்தது கொரோனா காரணமாக 30.09.2021 வரை கடைசி தேதி நீட்டிக்கப்பட்டுள்ளது.

www.Padasalai.Net

8) கடந்த சில ஆண்டுகளாக நான் முறையாக e-filing செய்து வருகிறேன் இருப்பினும் சில தடவை நான் வருமான வரி கட்டவில்லை என கடிதம் வருகிறதே அது ஏன்?

**எனது இந்த நீண்ட நெடிய பதிவிற்கு முக்கிய காரணம் நண்பர் ஒருவரின் இந்த வினா தான்..** இதற்கு ஒற்றை வரியில் பதில் சொல்ல வேண்டும் எனில்

உங்கள் தலைமையாசிரியர் (பணம் பெற்று வழங்கும் அலுவலர்-DDO) அவர்கள் 24Q சமர்பிக்காமால் இருந்திருப்பார் அல்லது அவர் சமர்பித்த 24Q இல் ஏதேனும் சிறு குறைபாடுகள் இருந்திருக்கலாம்.

9) அதென்ன 24Q ? என சந்தேகம் எழுவது இயல்பு.
இதற்கு பதில் அறிய…

நமது மாத ஊதியத்தில் பிடித்தம் செய்யப்படும் வருமான வரி மற்றும் வருமான வரி செஸ் தொகை எப்படி நமது வருமான வரி கணக்கில் வரவு செய்யப்படுகிறது என்பதை சற்று விரிவாக பார்க்க வேண்டும்.

தமிழகத்தின் மொத்த வருமான வரி பிடித்தம் தொகை மத்திய அரசு வருமான வரி துறை கணக்கில் Book Adjustment ஒவ்வொரு மாதமும் செய்யப்படுகிறது.

உதாரணத்திற்கு ஏப்ரல்2021 இல் மொத்த பிடித்தம் தொகை 1 கோடி எனில், அது Book Adjustment போது அந்தந்த DTO/PAO கணக்கில் (AIN- Account Identification Number) பிரித்து வரவு செய்யப்படுகிறது. இப்போது வருமானவரி தொகை AIN கணக்கில் இருக்கும்.

ஒவ்வொரு மாவட்ட கருவூல அலுவலரும் மாதம் மாதம் 24G சமர்பிப்பார்கள் AIN கணக்கில் இருக்கும் தொகை DDO-TAN கணக்கில் வரவு செய்யப்படும். (TAN- Tax deduction Account Number)

மாத மாதம் நம் தலைமையாசிரியர் (பணம் பெற்று வழங்கும் அலுவலர்-DDO) TAN கணக்கில் சரியான தொகை வரவு செய்யப்பட்டுள்ளதா? என்பதை நாம் BIN VIEW மூலம் அறிந்து கொள்ளலாம். (BIN- Book Identification Number).

ஒவ்வொரு பணம் பெற்று வழங்கும் அலுவலரும் **மூன்று மாதத்திற்கு** ஒரு முறை கட்டாயம் 24Q சமர்பிக்க வேண்டும். அப்படி செய்தால் மட்டுமே TAN இல் உள்ள தொகை தனிநபர் PAN இல் வரவு செய்யப்படும். (PAN- Permanent Account Number)

அதாவது தவறாமல் **மூன்று மாதத்திற்கு** ஒரு முறை உங்கள் DDO 24Q சமர்பித்தால் மட்டுமே நீங்கள் கட்டிய வருமானவரி தொகை உங்கள் வருமான வரி கணக்கு எண்ணில் பதிவாகி இருக்கும்.

10) பணம் பெற்று வழங்கும் அலுவலர் (DDO) - 24Q எப்போது சமர்பிக்க வேண்டும்?

| | period | Quarter | last date |
|---|---|---|---|
| a) | April – June – | First Quarter – | q1 – 31 July |
| b) | July – September- | Second Quarter – | q2 – 30 October |
| c) | October-December- | Third Quarter – | q3 – 31 January |
| d) | January- March – | Final Quarter – | q4 – 31 May |

11) ஒரு காலாண்டில் யாருக்கும் வருமான வரி பிடித்தம் செய்யவில்லை எனில் 24Q சமர்பிக்க வேண்டாம் தானே?

இல்லை – ஒவ்வொரு DDO உம் பிடித்தம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் நான்கு காலாண்டிலும் கட்டாயம் 24Q சமர்பிக்க வேண்டும்.

12) சமர்பிக்கவில்லை எனில்?

வருமான வரி சட்டத்தின் பிரிவு 234E படி நாள் ஒன்றிற்கு ரூபாய் 200 வீதம் பணம் பெற்று வழங்கும் அலுவலருக்கு காலதாமதக் கட்டணம் விதிக்கப்படலாம். பிரிவு 271H இன் படி அபராதம் 10000 ரூபாய்.

13) சரி DDO 24Q எங்கு யாருக்கெல்லாம் சமர்பிக்க வேண்டும்?

Auditor office or TIN-facilitation centre (TIN-Tax Information Network) **வருமானவரி கட்டினாலும் கட்டாவிட்டாலும் அனைத்து பணியாளர் விபரங்களையும் சரியான PAN உடன் 24Q இல் சமர்ப்பிக்க வேண்டும்.**

14) நாம் நேரடியாக இணையத்தில் பதிவேற்றம் செய்ய இயலுமா?

IFHRMS-DSC பயன்பாட்டிற்கு வரும் போது DSC மூலம் நாமே நேரடியாக பதிவேற்றம் செய்ய இயலும்.

15) DDO 24Q சமர்பிக்க கட்டணம் எவ்வளவு?

TIN-facilitation centre மூலம் பதிவேற்றம் செய்ய ஒரு காலண்டிற்கு கட்டணம் 50 ரூபாய் மட்டுமே அதிக எண்ணிக்கையிலான பணியாளர்கள் எனில் அதிகபட்ச கட்டணம் 100 மட்டுமே.

16) 50 அல்லது 100 ரூபாய் தானா? நாங்கள் இதுவரை 24Q சமர்பிக்க கட்டணம் 350 முதல் 600 வரை செலுத்தி வருகிறோமே?

TIN-facilitation centre மூலம் பதிவேற்றம் செய்ய கட்டணம் குறைவு தான் ஆனால் தகவல்கள் குறிப்பிட்ட வடிவில் இருக்க வேண்டும்.

நாம் அளிக்கும் தகவல்களை process செய்து upload செய்ய இந்தளவு கட்டணம் வசூலிக்கிறார்கள். நாமே சுயமாக Income tax website இல் இருக்கும் free software & e-tutorials பயன்படுத்தி process செய்து pen drive / cd /email மூலம் TIN-facilitation centre க்கு அனுப்பி குறைந்த கட்டணத்தில் பதிவேற்றம் செய்யலாம்.

17) DDO - 24Q சமர்பிக்க கட்டணத்தை யார் செலுத்த வேண்டும்?

இது பணம் பெற்ற வழங்கும் அலுவலரின் கடமை. **இதற்கென அரசு எந்த ஒரு நிதியினையும் தருவதில்லை.** 24Q சரியான நேரத்தில் சமர்பித்தல் அனைவருக்கும் தேவை. எனவே பல பள்ளிகளில் இதை ஒரு கூட்டு பொறுப்புடன் தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியர்கள் இணைந்து கட்டணம் செலுத்துகிறார்கள்.

சில பள்ளிகளில் வருமானவரி செலுத்துபவர்கள் மட்டும் தொகையினை தங்களுக்குள் சமபங்கிட்டு செலுத்திவருகின்றனர்.

**எனது தனிப்பட்ட கருத்து – வருமானவரி செலுத்தினாலும் செலுத்தாவிட்டாலும் பள்ளியில் ஆண்டிற்கு 2.5 இலட்சத்திற்கு மேல் ஊதியம் பெறுபவர்கள் அனைவரும் இணைந்து இந்த தொகையினை செலுத்தலாம்.**

www.Padasalai.Net

www.Padasalai.Net

18) 24Q விபரங்களை சரியாக சமர்ப்பிப்பது எவ்வாறு?

இணையதளத்தில் BIN View மூலம் வருமான வரி தொகையை சரிதானா என அறியலாம்…

https://onlineservices.tin.egov-nsdl.com/TIN/JSP/etbaf/ViewBIN.jsp

TAN , AIN eg.(விருதுநகர் மாவட்ட AIN-1010085), Period eg. Jan 2021 to Mar 2021உள்ளீடு செய்து விபரங்களை பெறலாம்.




நமது அலுவலகத்தில் 2021 ஜனவரி, பிப்ரவரி, மார்ச் மாதத்தில் எவ்வளவு தொகை (வருமான வரி மற்றும் வருமான வரி செஸ்) என்பதை குறிப்பிட்டு Check box (tick) and click the Verify Amount.

Amount matched – என வந்தால் சரி.

Amount mis matched – என வந்தால் தொகையில் ஏதோ ஒரு தவறு இருக்கிறது.

19) Amount mis matched – ஏன் வருகிறது?

நிச்சயமாக மாவட்ட கருவூலத்தில் இருந்து 24G சமர்பிக்கும் போது தவறு நிகழ வாய்ப்பே இல்லை. 10-15 ஆண்டுகளாக வருமான வரி சார்ந்த விடயங்களை பார்த்து வருபவன் என்ற அடிப்படையில் , e-payroll முறை வந்ததில் இருந்து DTO- 24G இல் தவறுகளே வருவதில்லை.

அப்படி எனில் தவறுகள் நம் பக்கம் தானா?

ஆம் சில அடிப்படை புரிதல் இருந்தால் தவறுகள் நிகழ வாய்ப்பே இல்லை.

அ) **ஒவ்வொரு மாதமும் ஒன்றாம் தேதி முதல் , கடைசி தேதி வரை நிகழ்ந்துள்ள கருவூல பரிமாற்றங்கள் மட்டுமே அந்த மாத கணக்கில் வரும்.**

உ.ம் - 2021 ஜனவரி மாத சம்பளத்தை ஏதேனும் ஒரு காரணத்தால் பிப்ரவரியில் பெற்றால். வருமான வரியை நாம் பிப்ரவரி2021 இல் தான் சேர்க்க வேண்டும். ஜனவரி மாத சம்பளம் என்பதால் நாம் ஜனவரி2021 இல் சேர்த்து BIN VIEW – பார்த்தால் amount mismatched என தான் வரும்.

ஆ) பொதுவாக சம்பளத்தில் வருமான வரி பிடித்தம் செய்வோம் அதே போல் ஏதேனும் ஒரு பணியாளருக்கு நிலுவைத் தொகை பட்டியல் சமர்ப்பித்து இருந்தால் சில நிகழ்வில் அதற்கும் வருமான வரி பிடித்தம் செய்து இருப்போம். Arrear Bill – I.T Amount சேர்க்காமல் BIN VIEW – பார்த்தால் amount mismatched என தான் வரும்.

இ) ஓய்வு பெற்ற பணியாளருக்கு ஈட்டிய விடுப்பு பட்டியலில் வருமான வரி பிடித்தம் செய்து இருப்போம் அந்த தொகையினை சேர்க்காமல் இருந்தால் amount mismatched என காட்டலாம்.

20) இதை எல்லாம் Auditor பார்த்துக் கொள்ள மாட்டாரா?

நிச்சயமாக – பல Auditor – Bin View சரிபார்த்து பின்னர் தான் 24Q சமர்பிப்பார்கள் இந்த நிகழ்வில் தவறே வராது.

சிலர் Bin View சரிபார்க்காமல் நாம் கொடுத்த தகவல்களை அப்படியே பதிவேற்றம் செய்தால் தவறு நிகழ வாய்ப்புள்ளது.

**நாமே Bin View சரிபார்த்து பிறகு Auditor இடம் 24Q சமர்பிக்க தகவல் அளித்தால் சரியாக இருக்கும்.**

21) 2020-2021 நிதியாண்டிற்கான 24Q –final quarter (q4) சமர்பிக்க கடைசி தேதி எது?

பொதுவாக மே31. இந்த ஆண்டு பெருந்தொற்றின் காரணமாக 2021 ஜுன் 30 வரை கால அவகாசம் நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

22) Form -16 எனது தலைமையாசிரியரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாமா?

ஒவ்வொரு பணம் பெற்று வழங்கும் அலுவலரும் (DDO) பணியாளர்களுக்கு Form -16 வழங்கவேண்டியது கட்டாயம்.

வருமானவரி சட்டத்தின் படி கையால் வழங்கப்படும் Form -16 செல்லத்தக்கது அல்ல. (DDO) கணினியில் தட்டச்சு செய்து வழங்குவதும் கூடாது. சில நண்பர்கள் வருமான வரிக் கணக்கீட்டுப் படிவங்கள் Income Tax Calculator (Excel Programme)

www.Padasalai.Net

www.Padasalai.Net

தயார் செய்யும் போது அதில் Form -16 உடன் வருகிறது அதில் தலைமையாசிரியர் கையொப்பம் பெற்றுப் பயன்படுத்துகிறார்கள். அதுவும் தவறு தான்.

**முறையாக (DDO) நான்கு காலண்டிற்கும் 24Q சமர்பித்த பிறகு , அது வருமான வரித்துறையால் சரிபார்க்கப்பட்ட பிறகு TRACES என்ற இணையதளத்தின் வாயிலாக பதிவிறக்கம் செய்யப்படும் Form -16 மட்டுமே சட்டப்பூர்வமானது.**

23) நான் செலுத்தும் வருமான வரி முறையாக எனது கணக்கில் வரவு செய்யப்பட்டுள்ளதா? என்பதை நான் எவ்வாறு அறிந்து கொள்வது?

அ) ஒவ்வொரு காலாண்டிலும் தங்கள் பணம் பெற்று வழங்கும் அலுவலர் 24Q சமர்பித்த பிறகு , அது வருமான வரித்துறையால் சரிபார்க்கப்பட்ட பிறகு தங்களின் அலைபேசி எண்ணிற்கு ITDEFL- இருந்து குறுஞ்செய்தி வரும்

எடுத்துக்காட்டாக:

"Total TDS by Employer of PAN BFJXXXXX4N for Qtr ending Sep 30 is Rs 24,960 and cumulative TDS for FY 20-21 is Rs 41,600. View 26AS for details".

ஆ) எப்போது வேண்டுமானாலும் இணையதளத்தில் நமது 26AS மூலம் வருமான வரி பிடித்தம் சார்ந்த விபரத்தை சரிபார்த்துக் கொள்ளலாம்.

24) நான் எப்போதும் வருமான வரியினை நிதியாண்டின் இறுதியில் அதாவது ஜனவரி மற்றும் பிப்ரவரி சம்பளத்தில் தான் பிடித்தம் செய்யச் சொல்கிறேன்...

அல்லது பிப்ரவரியில் கணக்கிட்டு ஓரே தவணையாக செலுத்திவிடுகிறேன்.

இது முற்றிலும் தவறு – டிசம்பருக்குள் 60 சதவீத வரியினை செலுத்தி இருக்க வேண்டும். இப்படி ஒரே தவணையில் வரி செலுத்தும் போது வருமானவரி பிரிவு 234C இன் படி அபராத வட்டி வசூலிக்கப்படலாம்.

25) நானே சுயமாக individual Income Tax Return (ITR-1) e-filing online இல் செய்வது எப்படி?

எளிய முறை தான், இது சார்ந்து பல youtube வீடியோக்கள் இணையத்தில் உள்ளன.

வருமான வரித்துறை இந்த ஆண்டு மாற்றங்களை கொண்டுவர உள்ளது. புதிய முறையும் எளிமையாக இருக்கும் என நம்புவோம்.

ஜுன் 7 முதல் புதிய இணையதளம் பயன்பாட்டிற்கு வர உள்ளது. அதன் பிறகு எனது அடுத்த பதிவில் அதுசார்ந்து விரிவாக பதிவு செய்கிறேன்.

நன்றி நண்பர்களே- தெரிந்ததை பதிவு செய்திருக்கிறேன் தவறுகள் இருப்பின் தாராளமாகச் சுட்டிக்காட்டலாம் திருத்திக் கொள்கிறேன். தங்களின் மேலான கருத்துகள் வரவேற்கப்படுகின்றன. **selva7pc@gmail.com**

**TNPGTA – மாநில சட்டச் செயலாளர்**

**க.செல்வக்குமார் –முதுகலை வேதியியல் ஆசிரியர் – விருதுநகர் மாவட்டம்.**